# ரூஹா சுவாச காற்று

காற்று 13 அக்டோபர் 2023 சுவாசம் 11
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-

## பராக்கிரமஞ் செய்யும் கர்த்தரின் வலதுகரம்



# இதயம் திறந்து உங்களுடன்...



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே.. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இஸ்ரவேல் தேசத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 15ம் தேதி எபிரேய காலண்டரின்படி புதுவருடம் 5784 ஆரம்பித்தது. அத்தேசத்தில் நடைபெற்ற ஜெப மாநாட்டில் பல்வேறு தேசங்களிலிருந்து வந்திருந்த போதகர்கள், ஜெபவீரர்கள் தங்களுடைய தேசத்திற்காக ஜெபங்களை ஏறெடுத்தார்கள். நம்முடைய இந்திய தேசத்தின் சார்பில் அடியேன், ஆராதனை மற்றும் ஜெபங்களை ஏறெடுக்க கர்த்தர் கிருபை செய்தார். **உங்கள் ஒவ்வொருவருக்காவும் குடும்பங்களுக்காகவும் பாரத்தோடு ஜெபங்களை ஏறெடுத்தேன். கர்த்தர் உங்களை சீயோனிலிருந்து ஆசீர்வதித்து, எண்ணிமுடியாத அதிசயங்களை உங்கள் வாழ்வில் காணச் செய்வாராக!**

## அக்டோபர் 7 - செங்கல்பட்டு பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபம்

தேவனுடைய பெரிதான கிருபையால் ஒவ்வொரு மாதமும் செங்கல் பட்டில் வைத்து ‘‘பின்மாரி எழுப்புதல் உபவாச ஜெபம்’’ நடைபெற்று வருகிறது. இந்த உபவாச ஜெபத்தில் செங்கல்பட்டில் உள்ள போதகர்கள், சுவிசேஷகர்கள், ஜெபவீரர்கள் கலந்து கொண்டு செங்கல்பட்டு மாவட்டத்திற் காகவும், இந்திய தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும் விசேஷித்த ஜெபங்களை ஏறெடுத்தார்கள். கடந்த செப்டம்பர் மாதம் சுவி. ஆல்பர்ட் சாலமோன் அவர்கள் கலந்து கொண்டு துதி ஆராதனை மற்றும் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த மாதம் அக்டோபர் 7ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும் இந்த உபவாச ஜெபத்தில் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கவும், தேவன் தரும் அற்புத விடுதலையையும், சுகத்தையும் பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறேன். மேலும் விபரங்கட்கு 9944371944 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.

இடம்: பிரின்ஸ் மஹால், ஜெயா ஸ்டோர் அருகில், ஆலப்பாக்கம் ரோடு, செங்கல்பட்டு.

## தொலைக்காட்சி ஊழியத்திற்காக ஜெபியுங்கள்

கடந்த மாதம் முழுவதும் ரூஹா ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதித்து மிகச் சிறப்பாக நடைபெற கிருபை செய்தார். நமது ரூஹா தொலைக்காட்சியில் ஜனங்களின் பக்தி விருத்தி ஏதுவான புதிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பு செய்து வருகிறோம். பிற மதத்தினரும் நம்முடைய ரூஹா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத்தை எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்கவும், இன்னும் பல நெட்வொர்க்கில் ரூஹா தொலைக்காட்சியை ஒளிபரப்பு செய்யவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். (மேலும் விபரங்கட்கு பக்கம் 14ஐப் பார்க்கவும்)

## எழுப்புதல் ஜெப மையத்திற்காக ஜெபியுங்கள்

அன்பானவர்களே, அப்போஸ்தலனாகிய தோமா இரத்தம் சிந்தி மரித்த சென்னைப் பட்டணத்தின் மையப்பகுதியான புனித தோமையார் மலைப்பகுதியில் 24 மணி நேர துதி ஜெப மையத்தை ஏற்படுத்தும்படி மிகுந்த ஜெபத்தோடு பிரயாசப்பட்டு வருகிறோம். **‘‘விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புவேன்’’** என்று சொன்ன வேத வார்த்தையின் படி, துதி மற்றும் ஜெபத்தினால் நாம் வாசல்களை சுதந்தரிக்கப்போகிறோம். இந்த எழுப்புதலின் காரியத்தில் உங்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆகவே இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். விசுவாசத்தில் பொருத்தனையோடு ரூஹா ஜெப மையத்திற்காக நீங்கள் விதைக்கும்படி உங்களை உற்சாகப் படுத்துகிறேன்.

## உங்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, கடந்த சில நாட்களாக தேவ ஆவியானவர் ஜெபிக்கும்படி என்னை பாரப்படுத்தின காரியங் களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். கடைசி காலங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக உலகத்தின் அழிவையும், ஏராளமான ஜனங்கள் மரிக்கிறதையும் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் **உங்கள் பிள்ளைகளுக்காகவும், குடும் பத்தின் பாதுகாப்பிற்காகவும் திறப்பிலே நின்று ஜெபிக்க உங்களை ஒப்புக் கொடுங்கள்.** சத்துருவானவன் தனக்கு கொஞ்சகாலம் மாத்திரமே உண் டென்று அறிந்து, உங்களை கிறிஸ்துவின் விசுவாசத்தினின்று விலகும்படி மிகத் தீவிரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறான். மிகவும் ஜாக்கிரதையாக உங்கள் அரண்களை ஜெபத்தில் காத்துக்கொள்ளுங்கள். குறிப்பாக படிக்கிற மாணவர்கள் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். பிள்ளைகளுக்கு விரோதமாக கட்டவிழ்க்கப்பட்டிருக்கிற தற்கொலையின் ஆவியை நிர்மூலமாக்கி, தேவன் ஒவ்வொரு பிள்ளைகளையும் பாதுகாக்கும்படியாக ஜெபியுங்கள்.

## புதிய ‘‘நன்றி’’ பாடல்கள்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், கர்த்தர் அடியேனுக்கு கொடுத்த இரண்டு பாடல்களை ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இந்த பாடல்கள் சோர்வினால் துவண்டுபோன ஜனங்களை உயிர்ப்பிக்கிற தாயும், இன்னும் அதிகமாக தேவனிடத்தில் நெருங்க உந்தித்தள்ளும் ஆராதனை பாடலாகவும் இருக்கிறது. தடைகள் நீங்கி, பாடல்கள் சீக்கிரத்தில் வெளியிட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஒவ்வொருநாளும் உங்களுக்காவும் உங்கள் குடும்பத்திற்காகவும் நானும் ரூஹா ஊழியத்தின் ஜெபவீரர்களும் பாரத்தோடு ஜெபித்து வருகிறோம். கர்த்தர் தமது வலதுகரத்தினால் உங்களுக்காக பராக்கிரமஞ் செய்வார். எனக்காகவும், ரூஹா ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!*

அன்பும் ஜெபமும்
**உங்கள் சகோதரன்**
**போதகர் ஆல்வின் தாமஸ்**



தீர்க்கதரிசன செய்தி

# பராக்கிரமஞ்செய்யும் கர்த்தரின் வலதுகரம்

– போதகர் ஆல்வின் தாமஸ்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இந்த அக்டோபர் மாதத்தில் தேவன் வல்லமையான காரியங்களை தமது வலதுகரத்தினால் உங்கள் வாழ்க்கையில் செய்யப்போகிறார். தேவனுடைய வலதுகரம் எப்படிப்பட்டது? வலதுகரத்தினால் தேவன் செய்யப்போகும் அதிசயங்களைக்குறித்து பார்க்கப்போகிறோம். மிகுந்த எதிர்பார்ப்போடு இந்த தீர்க்கதரிசன செய்தியை வாசித்து, அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**"நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்" (சங்கீதம் 118:15)**

முதலாவது தேவன், வாக்குத்தத்தங்களைத் தருவார். பின்பு கொடுத்த வாக்குத்தத்தத்தைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றுவார். உங்களுக்கும் தேவன் அநேக வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்களையெல்லாம் தம்முடைய பராக்கிரமம் நிறைந்த வலதுகரத்தினால் செய்து முடிப்பார். **அவர் வாக்கினால் சொன்ன எல்லாவற்றையும் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றுகிறார் (2 இராஜாக்கள் 8:15)**

நாம் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நினைக்கும்போது, நம்முடைய மூளை நம் கரத்திற்கு கட்டளைக்கொடுத்து அந்த வேலையைச் செய்து முடிக்கும். அதுபோல தேவன் உங்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய அற்புதத்தையும் அதிசயத்தையும் செய்ய தம்முடைய கரத்திற்கு கட்டளைக்கொடுக்கிறார். அந்த கட்டளையின்பேரில் தேவன் செய்ய விரும்புகிற வல்லமையான காரியத்தை, அவருடைய கரம் செய்து முடிக்கும்.

*(1986ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்திற்கும் அர்ஜென்டினா தேசத்திற்கும் இடையே உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் கடைசி சுற்று நடைபெற்றது. கடைசி பந்தை எந்த அணி அடிக்கிறதோ, அந்த அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். மிக விறுவிறுப்பாக சென்று கொண்டிருந்த போட்டியில் அர்ஜெண்டினா அணி வெற்றிப்பெற்றது. அர்ஜெண்டினா அணி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால் எப்படி வெற்றிப்பெற்றது என்று அந்த போட்டியின் வீடியோவை எடுத்து பார்த்தபோது, பந்தானது, தடுக்கச் சென்ற அர்ஜெண்டினா அணியைச் சேர்ந்த Diego Maradona என்பவரின் தலையிலும் காலிலும் படாமல் அந்த கோல் (Goal) கூண்டிற்குள் சென்றது. பின்னர் பத்திரிக்கையாளர்கள் எப்படி உங்கள் தலையும், காலும் படாமல் கோல் அடித்தீர்கள் என்று கேட்டபோது, **"IT WAS HAND OF GOD"** என்று Diego Maradona கூறினார். ஆம், உங்களின் இயலாமையின் நேரத்தில் தேவனுடைய கரம் உங்களுக்காக செயல்படும்.*

தேவனுடைய கரம் பல பரிமாணங்களில் உங்களுக்காக பராக்கிரமஞ்செய்கிறது. தேவனுடைய கரத்தின் குணாதிசயம் என்ன என்பதைக்குறித்து தியானிப்போம்.

## தயவு நிறைந்த வலக்கரம்

**இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான். தன் தேவனுடைய தயவுள்ள கரம் தன்மேல் இருந்ததினால் அவன் எருசலேமுக்கு வந்தான். (எஸ்றா 7:6,9)**

எருசலேம் நகரமும், அதின் அலங்கங்களும், சாலமோன் கட்டின தேவாலயமும் பாபிலோனியர்களால் சிறைபிடிக்கப்பட்டன. நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோனிய ராஜா தேவாலயத்தில் உள்ள எல்லா பொருட்களையும் எடுத்துக்கொண்டு, தேவாலயத்தை இடித்துப்போட்டான். பலவருடங்களுக்கு பிறகு பாபிலோனிய அரண்மனையில் வேலை செய்து கொண்டு வந்த எஸ்றாவுக்கும் அவனோடு கூட இருந்தவர்களுக்கும் எருசலேமில் உள்ள தேவாலயத்தை மறுபடியுமாய் எடுப்பித்து கட்ட வேண்டும் என்ற வைராக்கியமும் வாஞ்சையும் ஏற்பட்டது.

ஆகவே அவர்கள் ராஜாவினிடத்தில் சென்று, எருசலேமில் உள்ள தேவனுடைய ஆலயத்தை மறுபடியும் கட்ட வேண்டும். ராஜாவாகிய கோரேஸ் தேவாலயத்தைக்குறித்துப் பிறப்பித்த உத்தரவின்படி, ஆலயத்தைக் கட்டுகிறதற்கான செலவு, பொன், வெள்ளி, பணிமுட்டுகள் போன்றவற்றை எங்களுக்குத் தர வேண்டும் என்று கேட்டு ராஜாவினிடத்தில் விண்ணப்பம் வைத்தார்கள்.

அப்பொழுது அந்த ராஜா, எஸ்றா என்னென்ன காரியங்களையெல்லாம் கேட்டானோ அவைகளையெல்லாம் கொடுத்தான். அவன் எருசலேமுக்கு சென்று சகல ஆலயத்தைக் கட்டுவதற்கு

தேவையான சகல காரியங்களை நிறைவேற்ற உதவிகளையும் செய்தான். இவையெல்லாவற்றிற்கும் தேவனாகிய கர்த்தரின் தயவுள்ள கரம் எஸ்றாவின்மேல் இருந்ததே காரணம்.

வியாபாரத்திலும், தொழிலிலும், வேலையிலும், குடும்பத்தை நடத்துவதிலும், பிள்ளைகளை வளர்ப்பதிலும் தேவ தயவு நமக்கு மிக அவசியம். நாம் செய்கிற எந்த ஒரு காரியத்திலும் தேவனுடைய தயவு இல்லையென்றால் அதற்குரிய பலனைப் பெற முடியாது. தேவ தயவு என்பது வரிசையில் கடைசியாக நிற்கிற உங்களை முதன்மையான நபராக கொண்டு வருவதே.

*ஒரு முறை ஊழியத்திற்கு செல்வதற்காக விமான நிலையத்தில் என்னுடைய பெட்டியோடு நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நபர் வேகமாக வந்து, என்னுடைய பெட்டியை வாங்கி, என்னை நேராக விஐபி கேட் வழியாக அழைத்துக்கொண்டு போனார். அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. அவர் என்னைக்கூட்டிக்கொண்டு போனதினால்தான் நான் அன்று விமானத்தை பிடிக்க முடிந்தது. இதுபோல தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருப்பதை நான் அநேக முறை அனுபவித்திருக்கிறேன்.*

தேவனுடைய தயவுள்ள கரம் எஸ்றாவின்மேல் இருந்ததற்கு காரணம், அவன் கர்த்தருடைய வார்த்தையில் தேறினவனாயிருந்து, மற்ற ஜனங்களுக்கும் போதிக்கிறவனாய், அவர்களை நல்வழிப்படுத்து கிறவனாயிருந்தான். அன்பானவர்களே, கர்த்தருடைய வார்த்தையை அனுதினமும் வாசிக்கிறீர்களா? தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? உங்கள் பிள்ளை களுக்கு வசனத்தைப் போதிக்கிறீர்களா? உங்கள் மேலும் உங்கள் பிள்ளைகள்மேலும், நீங்கள் கையிட்டு செய்கிற ஒவ்வொரு காரியத்தின்மேலும் தேவனுடைய தயவுள்ள கரம் இருக்க வேண்டுமென்றால், தினமும் வார்த்தைகளைத் தியானிக்கிறவர் களாக இருங்கள். அப்பொழுது நீங்கள் கேட்கிற ஒவ்வொரு காரியத்தையும் பெற்றுக்கொள்ளுவீர்கள். நீங்கள் அலைந்து திரியமாட்டீர்கள். ஆசீர்வாதங்கள் உங்களைத் தேடி வரும்.

## விடுவிக்கிற வலக்கரம்

**கர்த்தாவே, உம்முடைய வலதுக்கரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது, கர்த்தாவே உம்முடைய வலதுக்கரம் பகைஞனை நொறுக்கிவிட்டது (யாத்திராகமம் 15:6)**

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் செங்கடல் முன்பாக நிற்கிறார்கள். பின்பாக பார்வோனும் அவனுடைய இரதங்களும் அவர்களைத் துரத்திக்கொண்டு வருகிறான். அப்பொழுது இஸ்ரவேலர்கள் கர்த்தரை நோக்கிக்கூப்பிட்டபோது, தேவன் மோசேயின் மூலமாகத் தம்முடைய வலதுக்கரத்தை நீட்டி, செங்கடலை இரண்டாகப்பிளந்து, அதில் ஜனங்களை கடந்து போகப்பண்ணினார்.

செங்கடலைப்பிளந்து, அதில் பார்வோனின் சேனை முழுவதையும் கவிழ்த்துப்போட்டது தேவனுடைய வல்லமையுள்ள கரம். சர்வலோகத்தையும் படைத்த சர்வ வல்லவரால் மாத்திரமே அதை செய்ய முடியும். போகவிடமாட்டேன் என்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்ற பார்வோனுக்கு தேவன் தன்னுடைய கைவல்லமையைக் காண்பித்து, பத்து வாதைகளினால் எகிப்தியரை அதம் பண்ணினார். வேதம் சொல்லுகிறது, “தேவன் தம்முடைய மகா பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும் இஸ்ரவேலரை புறப்படப்பண்ணினார்”

சத்துருவாகிய பிசாசு உங்களுக்குவிரோதமாக பல காரியங் களைச் செய்து கொண்டிருக்கிறானா? மாந்திரீகம், பில்லிசூனியத்தி னால் போராடிக்கொண்டிருக்கிறீர்களா? கர்த்தர் தம்முடைய வல்லமை யுள்ள கரத்தை உங்களுக்காக நீட்டுவார். உங்களுக்கு விரோதமாக செயல்படுகிற சத்துருவை தேவன் தம்முடைய வல்லமையுள்ள கரத்தினால் தண்டிப்பார். இஸ்ரவேல் ஜனங்களைப் போல நீங்கள் கர்த்தரை நோக்கி விண்ணப்பஞ் செய்யும்போது கர்த்தர் உங்கள் கூக்குரலின் சத்தத்தைக்கேட்டு தம்முடைய வல்லமையுள்ள கரத்தை நீட்டி உங்களை விடுவிப்பார்.

**உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும்; உமது வலதுகரம் உம்மை பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும். (சங்கீதம் 21:8)**

உங்களுக்கு சத்துருவாயிருப்பவர்கள், தேவனுக்கும் சத்துருக்களே. ஆகையால் உங்களுக்கு விரோதமாக எழும்பி, உங்கள் மீது குற்றஞ்சாட்டினவர்களின் கைக்கு நீங்கலாக்கி உங்களை விடுவிப்பார். சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோவை எரிகிற அக்கினி சூளைக்கும், ராஜாவின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த தேவன் உங்களையும் விடுவிப்பார்.

தாவீது அரசாண்ட நாட்கள் முழுவதும் பெலிஸ்தர்களோடும் மற்ற தேசங்களோடும் யுத்தம் நடந்து கொண்டே இருந்தது. ஆனால் வேதம் சொல்லுகிறது, தாவீது போன எல்லா இடத்திலும், எல்லா யுத்தங்களிலும் தேவன் தாவீதைக் காப்பாற்றினார். (2 சாமுவேல் 8:14) சவுல் மூன்று முறை ஈட்டியை எறிந்து தாவீதைக் கொல்ல நினைத்தபோதும் கர்த்தர் அவனைக்காப்பாற்றினார். தேவனுடைய அனுமதி இல்லாமல் ஒரு முடி கூட உங்கள் தலையிலிருந்து விழாது. ஆகவே உங்களுக்கு எதிரான காரியங்கள் வரும்போது சோர்ந்து போகாமல், கர்த்தரைப் பாடிக் கொண்டாடுங்கள். தேவனுடைய விடுவிக்கிற வல்லமையின் கரம் உங்களை நிச்சயமாய் விடுவிக்கும்.

## அணைக்கும் வலக்கரம்

**அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது, அவர் வலது கை என்னை அணைத்துக் கொள்கிறது (உன்னதப்பாட்டு 2:6)**

கர்த்தரின் வலக்கரம் உங்களை எல்லா விதமான இக்கட்டுகளிலிருந்து விடுவிப்பது மட்டுமல்ல, உங்களை அன்போடு அணைக்கிற கரமாயும் இருக்கிறது. ஆம், தேவன் உங்களை மிகவும்



நேசிக்கிறபடியினால் அவர் அணைத்துக்கொள்கிறார். தம்முடைய இடது கையை உங்கள் தலையின் கீழ் வைத்து, வலது கரத்தினால் உங்களை அணைத்து, உங்களை முத்தமிடுகிறார். அவர் எப்பொழுதும் உங்கள் நினைவாகவே இருக்கிறார்.

நெருக்கமானவர்கள் உங்களைவிட்டு பிரிந்து சென்றுவிட்டார்களா? பேச்சு துணைக்கு கூட ஆளில்லாமல் தனிமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? என்னை யாரும் நேசிக்க மாட்டார்களா என்று பாசத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கிறீர்களா? சொந்தங்கள் உங்களைக் காயப்படுத்தியிருக்கிறார்களா கவலைப்படாதீர்கள்! ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய கைகளில் ஏந்திக்கொண்டிருக்கும் தேவன் உங்களைக் கட்டி தழுவுகிறார். உங்களைத் தம்முடைய மார்போடு அணைத்துக்கொள்கிறார்.

நான் தேவனை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டேன், என்னை மறுபடியும் ஏற்றுக்கொள்வாரா? என்ற சந்தேகத்தோடு தூரத்தில் நின்று கொண்டிருக்கிறீர்களா? தயங்காமல் தகப்பனின் அன்பின் கரங்களுக்குள்ளாக வந்து விடுங்கள். அநாதி சிநேகத்தால் அவர் உங்களை சிநேகிறார். காருண்யத்தினால் உங்களை இழுத்துக்கொள்கிறார். கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் கரங்கள் ஆணிகளால் கடவாப்பட்டன. ஆணிகளினால் துளையிடப்பட்ட இயேசு கிறிஸ்துவின் கரங்கள் இப்பொழுதும் உங்களை அன்போடு அணைக்கிறது.

**ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் (ஏசாயா 66:13)**

பத்து மாதங்கள் கருவில் சுமந்து பெற்ற குழந்தையை ஒரு தாய் எப்படி மார்போடு அணைத்துக்கொண்டு முத்தமிடுவாளோ அதுபோல, தேவன் தம்முடைய கரத்தினால் உங்களை அணைத்துக்கொள்கிறார். இதோ என்னுடைய உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் (ஏசாயா49:16) என்று சொன்னவர், எந்த ஒரு தீங்கும் உங்களுக்கு ஏற்படாதபடிக்கு உங்களை கண்ணின்மணியைப் போலப் பாதுகாத்து வழிநடத்துவார். உங்கள் பக்கத்தில் ஆயிரம்பேரும், உங்கள் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், உங்கள் வலப்பக்கத்திலே அவர் நிழலாயிருந்து எந்த ஒரு சேதமும் ஏற்படாதபடி காப்பார்.

*என்னுடைய நண்பர்களால் எல்லாவற்றையும் இழந்து, ஒன்றுமில்லாமல் நானும் என் மனைவியும், 6 மாத கைக் குழந்தையும் நடு ரோட்டில் நின்று, தற்கொலை செய்து கொள்ளலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, தேவனுடைய அன்பின் கரம் எங்களை அணைத்தது. அவருடைய கரம் மட்டும் எங்களைத்தேற்றாமல், அணைக்காமல் இருந்திருந்தால் நாங்கள் என்றோ மடிந்துபோயிருப்போம். ஒவ்வொருநாளும் தேவனாகிய கர்த்தர் எங்களை ஏந்தி, சுமந்து, காத்து, வழிநடத்தி வந்து, ஊழியத்தைக்கொடுத்து, இலட்சகணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றியிருக்கிறார் என்றால் அவருடைய அன்பின் கரமே.. அதை எண்ணி தினமும் நான் நன்றி செலுத்துகிறேன்.*

நீங்களும் எதிர்காலத்தைக்குறித்து மிகவும் பயந்து கொண்டிருக்கிறீர்களா? என்னுடைய திருமணம் எப்படி நடக்கும்? பொருளாதார தேவைகளை எப்படி சந்திப்பது? கடனாளியாகிவிடுவேனோ? என்று பயந்து கொண்டிருக்கிறீர்களா? அன்பு வாலிப தம்பி, தங்கை, கர்த்தர் உங்களைப் பார்த்து, ''பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன், என் நீதியின் வலதுகரத்தினாலே உன்னைத் தாங்குவேன்'' (ஏசாயா 41:10) என்று மிகுந்த அன்போடு சொல்கிறார். ஆகவே நீங்கள் எதைக்குறித்தும் பயப்படாதீர்கள். எப்பொழுதும் உங்களுடனே கூட இருந்து உங்களை வழிநடத்தும் சர்வ வல்லமையுள்ள தேவன் உங்களோடு கூடவே இருக்கிறார்.

## தொட்டு சுகமாக்கும் வலக்கரம்


**அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக்கொண்டான். இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. அவன் சுத்தமானான். (மாற்கு 1:40-43)**

குஷ்டரோகியைச் சுத்தமாக்குவதற்கு இயேசுகிறிஸ்து ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலே போதும். ஆனால் அவர் கரத்தை நீட்டி தொடுவதற்கு காரணம் உண்டு. மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி, குஷ்டரோகம் உள்ளவர்களைப் பார்க்கவோ, அவர்களிடம் பேசவோ, அவர்களைத் தொடவோ கூடாது. அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஊருக்கு வெளியவே குடியிருக்க வேண்டும். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் அந்த குஷ்டரோகி வந்து, என்னை சுத்தமாக்கும் என்று மிகவும் தாழ்மையாக விண்ணப்பம் செய்தபோது, இயேசு மனதுருகி, தம்முடைய கரத்தை நீட்டி, அவனைத் தொட்டு சுகமாக்கினார்.

ஒரு மனிதன் பாவத்தோடு இணையும்போது, பாவம் அந்த மனிதனை ஆட்கொள்கிறது. ஆனால் பரிசுத்தராகிய இயேசு கிறிஸ்துவும் பாவியாகிய மனிதனும் இணையும்போது, இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கும் பரிசுத்தம், நித்திய ஜீவன், பரிபூரண சுகம் எல்லாம் அந்த மனிதனுக்குள் வந்துவிடுகிறது. ஆகவே இயேசு கிறிஸ்து சபிக்கப்பட்ட மனிதனாகிய அந்த குஷ்டரோகியைத் தொட்டு சுகமாக்கி அற்புத சுகத்தையும் விடுதலையையும் கொடுத்தார்.

**கொன்னைவாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய**






**நாவைத்தொட்டு, வானத்தை அண்ணார்ந்து பார்த்து, பெருமூச்சு விட்டு: ''எப்பத்தா'' என்றார். அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப் பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வை யாய்ப் பேசினான்.** (மாற்கு 7:32)

காது கேட்காமலும், வாய் பேச முடியாத ஒரு மனிதனை இயேசுகிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தபோது, அவர் அவனைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, தன்னுடைய வலது கையில் உமிழ்ந்து, அவன் நாவைத்தொட்டு, எப்பத்தா என்று சொன்னபோது, அவனுடைய காதுகள் திறந்தது, நாவின் கட்டுகள் அவிழ்ந்தது, மிக தெளிவாக பேசினான். இதுபோல இரண்டு குருடர்கள் இயேசுவினிடத்தில் வந்து, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமாய் கூப்பிட்டபோது, இயேசு அவர்களின் கண்களைத் தொட்டு சுகமாக்கினார் (மத்தேயு 20 34). பேதுருவின் மாமி மிகவும் ஜீரத்தினால் எழுந்திரிக்க முடியாமல் படுத்துக்கிடந்தபோது, இயேசு அவள் கையைத் தொட்டவுடனே ஜீரம் அவளை விட்டு நீங்கிற்று. அவள் எழுந்திருந்து அவருக்கு பணிவிடை செய்தாள் (மத்தேயு 8:15)

அன்பானவர்களே, இயேசு கிறிஸ்து இன்றும் தம்முடைய தழும்புகள் உள்ள கரத்தை உங்களுக்கு நேராக நீட்டுகிறார். அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமாவீர்கள். எப்பேர்ப் பட்ட வியாதியாயிருந்தாலும் இயேசுகிறிஸ்து சுகமாக்க வல்லமை யுள்ளவராய் இருக்கிறார்.

## மேன்மைப்படுத்தும் கரம்

**யோசேப்பு அவ்விருவரையும் கொண்டு வந்து, எப்பீராமைத் தன் வலதுகையினாலே இஸ்ரவேலின் இடது கைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடது கையினாலே இஸ்ரவேலின் வலது கைக்கு நேராகவும் விட்டான். அப்பொழுது இஸ்ரவேல் மனமறிய, தன் வலதுகையை நீட்டி இளைவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும் தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான் (அதியாகமம் 48 13,14)**



யோசேப்பிற்கு இரண்டு குமாரர் கள் மூத்தவன் பேர் மனாசே. இளை யவன் பேர் எப்பிராயீம். இஸ்ரவே லரின் வழக்கின்படி முதற்பிறந்த வனுக்கு சேஷ்டபுத்திர பாகத்தை அதாவது இரண்டு பங்கு ஆசீர் வாதத்தைக் கொடுக்க வேண்டும். முற்பிதாவாகிய யாக்கோபு தன்னு டைய கடைசி காலத்தில் யோசேப்பின் குமாரர்களை ஆசீர்வதிக்கும் படி விரும்பினான். ஆகவே யோசேப்பு தன் குமாரர்களை யாக் கோபினிடத்தில் அழைத்துக் கொண்டு வந்தான். வலது கையின் ஆசீர் வாதம் மிக முக்கியமானதாக கருதப்பட்டபடியினால் யாக்கோபின் வலது கைக்கு நேராக மூத்தவனாகிய மனாசேயையும், இடது கைக்கு நேராக இளையவனாகிய எப்பிராயீமையும் நிறுத்தனான்.

ஆனால் கண்கள் மங்கலாகி, மிகவும் முதிர்ந்த வயதாயிருந்த யாக்கோபு, தன்னுடைய மனமறிய, மிகுந்த நிதானத்துடன் தனது வலதுகையைத் தூக்கி எப்பிராயீமின் தலையின்மேலும், இடது கையைத் தூக்கி மனாசேயின் தலையின்மேலும் வைத்து ஆசீர்வதித்தான்.

இதைக்கண்ட யோசேப்பு, எப்பிராயீமுடைய தலையின்மேல் இருந்த யாக்கோபின் வலதுகையை மனாசேயினுடைய தலை யின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து, என் தகப்பனே அப்படியல்ல, மனாசே மூத்தவன். இவனுடைய தலையின்மேல் உம்முடைய வலதுகையை வைக்க வேண்டும் என்று சொன்னான். ஆனால் யாக்கோபு, அவனைத்தடுத்து, எனக்குத்தெரியும் என்று சொல்லி, தன் வலது கையை எப்பிராயீம் மீதுவைத்து ஆசீர்வதித்தான்.

எனக்கன்பான தேவனுடைய பிள்ளையே, நீங்கள் வலது கையின் ஆசீர்வாதத்திற்கு தகுதியானவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவனுடைய அநாதி திட்டம் உங்களை மற்றவர்களைக்காட்டிலும் மேன்மைப்படுத்துவதே. உலகம் உங்களை ஒதுக்கியிருக்கலாம். ஆனால் தேவன் உங்களை ஒரு நாளும் வெறுக்கவில்லை. உங்களை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம். என்னிடத்தில் திறமைகள், தாலந்துகள், பக்கபலங்கள் எதுவுமே இல்லை, வாழ்க்கையில் எப்படி சாதிப்பேன், எப்படி என் பிள்ளைகளைக் கரைசேர்ப்பேன் என்று சோர்ந்துபோயிருக் கிறீர்களா? தேவன் தம்முடைய வலது கரத்தை உங்களுக்கு நேராக நீட்டி, உங்கள் தலையின்மீது வைத்து உங்களை ஆசீர்வதிக்கிறார். நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு தேவன் தேசத்திலே உங்களை உயர்த்துவார்.

**உம்முடைய கரத்திலே சத்துவமும், வல்லமையும் உண்டு, எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும் (1 நாளாகமம் 29:12)**

தேவனுடைய கரமே உங்களை இந்த உலகத்தில் மேன்மைப் படுத்தும். ஆடுகளுக்கு பின்னாக அலைந்த தாவீதை சமஸ்த இஸ்ர வேலுக்கும் இராஜாவாக மாற்றினது தேவனுடைய கரமே. வெறும் கோலும் கையுமாய் ஒன்றுமில்லாமல் இருந்த யாக்கோபை இரு பரிவாரங்கள் உடையவனாய், இஸ்ரவேலாய் மாற்றினது தேவனுடைய கரம். சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்தி, பிரபுக்களோடும் ராஜாக்களோடும் அமரச் செய்து, மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கச் செய்யும் நம்மு டைய தேவன், உங்களையும் சகல ஜனங்களின் கண்களுக்கும் முன்பாக மேன்மைப்படுத்துவார். கர்த்தருடைய கரம் உங்களோடு கூட இருக்கிறதை மற்ற ஜனங்களும் கண்பார்கள். கர்த்தருடைய வலதுகரம் உங்களுக்காக பராக்கிரமஞ்செய்யும்!

# சேட்டைக்காரனும் சரித்திரனாவான்!!



– போதகர் ஜாய் ஆல்வின்

அன்பானவர்களே, இந்த குடும்ப செய்தி வழியாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நாட்களில் பிள்ளைகளை வளர்ப்பதும், பிள்ளைகளின் மனநிலைமைகள், பழக்கவழக்கங்கள், செயல்பாடுகளை புரிந்து கொள்வதும் சரிசெய்வதும் பெற்றோர்களுக்கு மிகவும் சவாலாக உள்ளது. என்னுடைய மகன் மிகவும் சேட்டை பண்ணுகிறான், எதையாவது உடைத்து விடுகிறான், ஒரு இடத்தில் இருப்பதில்லை, மிகுந்த தொல்லைக்கொடுக்கிறான் என்று பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக்குறித்த புகார்களை அள்ளிவீசுகின்றனர். இப்படிப்பட்ட பெற்றோர்களுக்கு தேவன் கொடுக்கும் ஆலோசனையை இந்த பகுதியில் பார்ப்போம்.

நீரஜ் சோப்ரா பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் சிறியவயதில் பயங்கரமான சேட்டைக்காரர். அவருடைய சேட்டைகளை அவரின் அப்பாவால் அடக்க முடியவில்லை. மரத்தில் உள்ள தேனிக்கூட்டை கலைத்துவிடுவது, மாட்டின் வாலை பிடித்து இழுப்பது போன்ற சேட்டைகளை பண்ணுவராம். நீரஜ் சோப்ராவின் அப்பா அவரை ஒரு தடகள வீரராக மாற்ற வேண்டும் என்று நினைத்தார். ஆகவே, அவரை சிவாஜி ஸ்டேடியத்திற்கு அழைத்துக்கொண்டு போவார். ஆனால் நீரஜ்க்கு தடகள வீரராவது பிடிக்கவில்லை. அந்த சமயத்தில் ஸ்டேடியத்தில் ஈட்டியை எறிந்து பயிற்சி செய்து கொண்டிருக்கிறவர்களைப் பார்த்தபோது, தானும் ஈட்டியை எறிய வேண்டும் என்ற ஆசை வந்தது. தன் அப்பாவிடம் சொன்னபோது, அவர் அதற்கான பயிற்சி செய்ய மிகுந்த ஒத்துழைப்பைக் கொடுத்தார். நீரஜ் கடுமையாக பயிற்சி செய்து, இந்தியாவிற்கான ஈட்டி எறிதல் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வாங்கிக்கொடுத்தார். 2020ல் நடைபெற்ற டோக்கியோ ஒலிம்பிக்கில் 87.58 மீட்டர் ஈட்டியை எறிந்தார். 2023ல் 88.17 மீட்டர் ஈட்டியை எறிந்து உலக சாதனை படைத்தார்.

உங்கள் பிள்ளைகள் சேட்டைகாரர்களாய் இருக்கிறார்கள் என்று கவலைப்படுகிறீர்களா? அவர்கள் மிகவும் ஆக்டிவ் ஆக இருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகளைக்குறித்து வருத்தப்படுவதை நிறுத்தி, அவர்களுக்குள் இருக்கும் திறமைகளைக் கண்டுபிடியுங்கள். நீரஜ் சோப்ராவின் தகப்பன் நீரஜ்க்குள் இருக்கும் ஆசைகளையும், திறமைகளையும் கண்டறிந்ததினால்தான் சேட்டைக்காரன் இன்று சரித்திரம் படைக்கிறவனாய் மாற்றப்பட்டிருக்கிறான்.




உங்கள் பிள்ளைகளைக்குறித்த தேவ திட்டத்தை பெற்றோர்களாகிய நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். அவர்களுடைய எதிர்காலத்தை, படிப்பின் காரியத்தை தேவனுடைய சமூகத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். எப்பொழுதும் வேலை என்று ஓடிக்கொண்டிருக்காமல் தினமும் உங்கள் குடும்பத்திற்காக, பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். அவர்களோடு நேரம் செலவழியுங்கள். குழந்தைகளுக்கு கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தை கற்றுக்கொடுங்கள். உங்களுடைய ஜெபம் கீழ்படியாத, அடங்காத பிள்ளைகளின் சுபாவத்தை மாற்றும். வருங்காலத்தில் உங்களுக்கு நற்பெயரை உண்டாக்குகிற பிள்ளைகளாயிருப்பார்கள். உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், அவர்களின் சமாதானம் பெரிதாயிருக்கும் (ஏசாயா 54:13)

மேலும் உங்கள் குழந்தைகளுக்கு நல்ல நண்பராக இருங்கள். குழந்தைகளுடன் ஆரோக்கியமான உறவைக் கட்டி எழுப்புங்கள். உங்களுடன் எதையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை கொடுங்கள். அன்பினால் நீங்கள் அவர்களை ஆளுகை செய்யுங்கள். இயேசுகிறிஸ்து விரும்பும் விதத்தில் அவர்களோடு பேசுங்கள். இப்படி நீங்கள் செய்யும்போது வேறு எந்த தீய காரியத்திற்கும் அவர்கள் இடறி செல்லமாட்டார்கள் அல்லது ஆறுதலுக்காக வேறு எந்த நபரையும் கண்டுபிடிக்க முயற்சிக்க மாட்டார்கள்.

## தினமும் உங்கள் பிள்ளைகளைப் பார்த்து சொல்ல வேண்டிய ஆசீர்வாதங்கள்

- என் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், என் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும் (ஏசாயா 54:13)
- என் சந்ததி கர்த்தருக்கு முன்பாக நிலைபெற்றிருக்கும் (சங்கீதம் 102:28)
- என் சந்ததி பூமியில் பலத்திருக்கும் (சங்கீதம் 112:2)
- என் பிள்ளைகள் ஒலிவ மரக்கன்றுகளைப்போல வளருவார்கள் (சங்கீதம் 128 3)
- என் சந்ததி கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்றவர்கள் (ஏசாயா 61:9)
- என் பிள்ளைகளுக்கு தேவன் நன்மை செய்து அவர்கள் பேரில் சந்தோஷமாயிருப்பார் (எரேமியா 32:40)
- என் சந்ததியின்மேல் தேவன் தம்முடைய ஆவியையும் என் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவார் (ஏசாயா 44:3)
- கர்த்தர் என் பிள்ளைகளை வர்த்திக்கப்பண்ணுவார் (சங்கீதம் 115:14)
- என் பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்தரம் (சங்கீதம் 127:3)
- என் பிள்ளைகள் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைவார்கள் (லூக்கா 2:52)
- என் சந்ததி கர்த்தரை சேவிக்கும். தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும் (சங்கீதம் 22:30)
- என் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் (ஏசாயா 54:3)





# நன்மை செய்தவரைத் துதியுங்கள்

**வாழ்க்கையில் தீராத வியாதி, கடன் பிரச்சனை, சமாதானமின்மை போன்ற ஏதோ ஒரு காரியத்தினால் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்து இன்றும் உங்களுக்கு அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார். ரூஹா ஊழியங்கள் மூலமாக தேவன் அநேகருக்கு விடுதலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு இயேசு கிறிஸ்து செய்த அற்புதத்தின் சில சாட்சிகள்**





## கர்த்தருடைய பரிபூரண ஜீவன் என் மகனுக்கு கிடைத்தது

என் பெயர் ஷாலினி. என் மகன் அஜய். அவனுக்கு 2019ம் ஆண்டிலிருந்து அடிக்கடி தாங்கமுடியாத தலைவலி, கைக்கால்கள் விழுந்துபோகுதல் ஏற்படும்போது மிகுந்த பெலவீனமாகிவிடுவான். இதனால் நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது, மருத்துவர்கள் அவனை பரிசோதித்து மருந்து மாத்திரைகளால் குணமாக்கிவிடலாம் என்று சொல்லி, மாத்திரைகளை எழுதிக்கொடுத்தார்கள். ஆனாலும் அவனுக்கு சுகம் கிடைக்கவில்லை. மறுபடியுமாக அரசு மருத்துவமனைக்கு சென்று பல பரிசோதனைகளை எடுத்துப்பார்த்தபோது, நரம்பியல் மருத்துவர் கண்டிப்பாக அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அறுவை சிகிச்சை தோல்வியடைந்தால் கைக்கால்கள் விழுந்துவிடும், கோமா நிலைமைக்கு செல்ல நேரிடும் என்று கூறினார்கள். இதனால் நாங்கள் மிகவும் பயந்தோம். அப்பொழுது போதகர் ஆல்வின் தாமஸ் அவர்களைச் சந்தித்து, ஜெபித்தோம். போதகர் மகனுக்காக பாரத்தோடு ஜெபித்து, ''நீ சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கையை விவரிப்பாய்'' என்ற வார்த்தையைக் கொடுத்தார். நாங்கள் கர்த்தருடைய வார்த்தையை நம்பி சென்றோம். எங்களிடம் கையெழுத்து வாங்கினபின்பு மகனை ஆப்ரேஷன் தியேட்டருக்கு அழைத்து சென்றார்கள். தலையில் உள்ள இரத்தக்குழாயை அறுத்து வேறு இடத்தில் அதைப் பொறுத்தி, சுமார் 8 மணி நேரத்திற்கும் மேலாக அவனுக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அறுவை சிகிச்சை முடிந்தபின்பு மூன்று நாட்களே என்னுடைய மகன் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தான். பின்பு அவனை நார்மல் வார்டுக்கு மாற்றிவிட்டார்கள். அவனோடு கூட 6 பேருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் என் மகனுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதபடிக்கு நல்ல முறையில் அறுவை சிகிச்சை நடைபெற தேவன் கிருபை செய்து, பூரண சுகத்தைக் கொடுத்தார். **இவன் இறந்துவிடுவான் என்று பலர் சொன்னாலும், தேவன் என் மகனுக்கு அவருடைய வார்த்தையின்படி ஜீவனைக் கொடுத்து காப்பாற்றினார்.** கர்த்தருக்கே மகிமை செலுத்துகிறோம்.

## மரணப்படுக்கையில் அற்புத சுகம் கொடுத்தார்

என் பெயர் லீலா. நான் கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளயத்தில் வசித்து வருகிறேன். என் மகள் ஜோஸ்லின்-க்கு அதிகமான காய்ச்சல் இருந்தது. மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தபோது அவளுக்கு டெங்குகாய்ச்சல் என்று மருத்துவர்களால் உறுதிசெய்யப்பட்டது. குழந்தைக்கு தேவையான சிகிச்சை அளிப்பதற்கு எங்களிடம் வசதி இல்லை. நீங்கள் கோயம்புத்தூருக்கு சென்று அங்குள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளுங்கள் என்று எங்களை அனுப்பினார்கள். குழந்தை இரத்தவாந்தி எடுத்தது. நாடித்துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது. நாங்கள் மிகவும் பயந்து கோயம்புத்தூர்க்கு அழைத்துச் சென்றோம். அந்நேரத்தில் ரூஹா ஊழியத்தின் தொலைபேசி எண்ணிற்கு போன் செய்து என் மகளுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஜெபவீரர்கள் பாரத்தோடு ஜெபித்தார்கள். **கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு 12 மணி நேரத்திற்குள்ளாக இரத்தவாந்தி நின்று காய்ச்சல் இல்லாமல் பூரண சுகத்தைப் பெற்றுக்கொள்ள கிருபை செய்தார். ஜீவனைக்காப்பாற்றின தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.**

## ஜெபத்தைக்கேட்டு சுகம் கொடுத்தார்



என் பெயர் மாலதி. நான் ஹைதரபாத்தில் வசிக்கிறேன். நான் கடந்த இரண்டு வாரங்களாக மிகுந்த காய்ச்சலினாலும், இரத்தப்போக்கினாலும் கஷ்டப்பட்டேன். மருத்துவரை சந்தித்து, மருந்துகளை எடுத்துக்கொண்டாலும் எனக்கு குணமாகவே இல்லை. அப்பொழுது ரூஹா ஊழியத்தைத் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு என்னுடைய சரீர சுகத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஜெபவீரர்கள் பாரத்தோடு எனக்காக ஜெபித்தார்கள். **அன்றைய இரவே கர்த்தர் எனக்கு இரத்தப்போக்கிலிருந்தும், காய்ச்சலிலிருந்தும் பரிபூரண சுகத்தைக்கொடுத்தார்.** கிருபையாய் எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.



## எட்டு வருடத்திற்கு பிறகு, குழந்தை செல்வத்தைக் கொடுத்தார்

என் பெயர் சரிதா. எனக்கு திருமணமாகி எட்டு வருடங்களாயிற்று. ஆனால் எங்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. நாங்களும் எவ்வளவோ மருத்துவமனைக்குச் சென்று, மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டும் பயனில்லை. மிகுந்த மன வேதனைக்குள் நானும், என் கணவரும் இருந்த சூழ்நிலையில் ஒரு நாள் தற்செயலாக ரூஹா டிவியைப் பார்க்க நேரிட்டது. அப்பொழுது போதகர் குழந்தை இல்லாதவர்களுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். நாங்களும் விசுவாசத்தோடு ஜெபித்தோம். ஜெப வேளையின்போது, போதகர் தீர்க்கதரிசனமாக, **“அடுத்த மாதத்தில் நீங்கள் கருத்தரித்திருப்பீர்கள்”** என்று சொன்னபோது, நாங்கள்வார்த்தையைப் பிடித்துக்கொண்டு ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு அற்புதமாய் நான் கருத்தரிக்கும்படி கிருபைச் செய்தார்.

## இரட்டிப்பான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார்



என் பெயர் காயத்திரி. நான் பெங்களூர் பட்டணத்தில் வசிக்கிறேன். நான் யூடியூப் வழியாக போதகரின் ஆராதனைப் பாடல்கள் மற்றும் செய்திகளைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கிறது. கடந்த ஜீலை மாதம் சூப்பர்நேச்சுரல் திருப்புமுனை விடுதலைக்கூட்டத்தில் ஆன்லைன் மூலமாக கலந்து கொண்டேன். எனக்கு பல வருடங்களாக பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்காமல் இருந்தது. இந்த கூட்டத்தில் எனக்கு வேலையில் பதவி உயர்வு வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருந்தேன். **கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு நான் நினைக்கிறதற்கும் மேலாக Team Leader ஆக எனக்கு பதவி உயர்வு கொடுத்து, என் சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்தினார். கர்த்தருக்கே மகிமை!**



## சாதகமில்லாத சூழ்நிலையை சாதகமாக மாற்றினார்

என் பெயர் மஞ்சு. நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கிறேன். நான் வெளிநாடு செல்வதற்கான வீசா கிடைக்கவில்லை. இந்நிலையில் நான் ஜீலை மாதம் நடைபெற்ற சூப்பர்நேச்சுரல் விடுதலைக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்தக்கூட்டத்தில் போதகர் தீர்க்கதரிசனமாக, **இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உங்களுக்கு தேவன் புதிய வழிகளைத் திறக்கப்போகிறார்** என்று கூறினார். நான் அந்த வார்த்தையைப் பிடித்துக்கொண்டு ஜீலை 5ம் தேதி மறுபடியுமாக வீசாவிற்கு விண்ணப்பித்தேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஜீலை 10ம்தேதி எனக்கு சிங்கப்பூர் தேசத்திற்கான வீசா கிடைத்தது. **சாத்தியமே இல்லாத நிலையில் கர்த்தர் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தி, எனக்கு புதிய வழிகளைத் திறந்து** கொடுத்த கிருபைக்காய் நன்றி செலுத்துகிறேன்.


## விசா கிடைக்கவும் வெளிநாடு செல்லவும் கிருபை செய்தார்



என் பெயர் ராஜாகுமாரி. நான் மதுரையில் வசிக்கிறேன். நான் ரூஹா டிவியில் ஒளிபரப்பாகும் அனைத்து ஜெபக்கூட்டங்களிளையும் ஆன்லைன் மூலமாக பார்ப்பேன். விசேஷமாக ஜுலை மாதம் நடைபெற்ற சூப்பர் நேச்சுரல் விடுதலைக்கூட்டத்தின் 7 நாட்களும் ரூஹா டிவியில் பார்த்து வந்தேன். அப்பொழுது என்னுடைய விசாவிற்காகவும், டிக்கெட் எடுப்பதற்கான பணத்திற்காகவும் ஜெபித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய ஜெப விண்ணபத்தையும் ரூஹா ஊழியத்திற்கு அனுப்பி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். நேரலையில் போதகர் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டு எனக்கு **விசா கிடைக்கவும், டிக்கெட் எடுப்பதற்கான பணத்தேவைகளை சந்திக்கவும் கிருபை செய்தார். செப்டம்பர் 18ம் தேதி லண்டன் தேசத்திற்கு வேலைக்கு செல்ல தேவன் கிருபை பாராட்டினார்.** கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



அன்பானவர்களே! இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார். உங்கள் ஜெபவிண்ணப்பங்கள் எதுவாயிருந்தாலும் கீழே உள்ள தொலைப்பேசி எண்ணுக்கு போன் மூலமாகவோ, வாட்சப் மூலமாகவோ தெரியப்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம். மேலும் நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து அற்புதங்களைப் பெற்றிருப்பீர்களென்றால் உங்கள் சாட்சியை தேவ நாமத்தின் மகிமைக்கென்று எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். **தொலைப்பேசி எண்கள் 9884901777, 044 - 61328777**










- PAS. CHERIE MITCHELLE

YOUTH SPECIAL

# இயற்கையின் நகல்...

அன்பான நண்பர்களே! மீண்டும் உங்களை இந்த வாலிபர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் மிக்க மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க்கை என்பது ups and downs நிறைஞ்சது. உயர்வாக இருந்தாலும், தாழ்வாக இருந்தாலும் கர்த்தரின் நிலை சமநிலையாகத்தான் உள்ளது. உங்களோட அனுதின வாழ்க்கையில் கர்த்தரின் அன்பை ஒவ்வொரு நாளும் உணர்ந்து கிருபையால வாழ்ந்துக்கொண்டிருக்கீங்கனு நான் ஆண்டவருக்குள் முழுமையாக விசுவாசிக்கிறேன்.

"அதே மாதிரி இருக்கு", "உங்கள போலவே ஒருத்தர பாத்தேன்" என்ற வார்த்தைகள் எல்லாமே நாம் வழக்கமாக பயன்படுத்தும் வார்த்தைகள். ஒரு குறிப்பிட்ட பொருளையாவது, நபரையாவது, இடத்தையாவது அல்லது நிகழ்வையாவது அதனோடு தொடர்புடையதோடு ஒப்பிட்டு கூறும்போதுதான் நாம் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவோம். ஆனால், உண்மையில் ஆராய்ந்து பார்த்தால், உண்மை வேறு, மாதிரி வேறு என்பது நமக்கு புரியும். அது மாதிரி இருக்கலாம் ஆனா அது தான் இல்ல. அந்த நபரை போலவே இந்த நபரும் காட்சியளிக்கலாம் ஆனால் இவர் வேறொரு நபர். சரி இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போ நீங்க ஏன் மாதிரியை பத்தி பேசிட்டு இருக்கீங்க என்று நீங்க நினைக்கலாம் **AI** என்று சொல்லப்படுகிற செயற்கை நுண்ணறிவை குறித்துதான் நாம பார்க்க போகிறோம். காலம் போகுற போக்கப் பார்த்த technologyயின் வளர்ச்சி இன்னும் என்னவெல்லாம் செய்ய போகிறது என்று சிந்திக்க வைக்கிறது.

மனுஷனால எளிதில் செய்ய முடியாததை செய்யவும் அவனுடைய வேலை பளுவை குறைக்கவுமே இந்த தொழில்நுட்பம் நமக்கு பயன்படுகிறது. பணியை விரைந்து செய்து முடிக்க உண்மையிலே அது பயன்பட்டாலும், அதனுடைய நவீன வளர்ச்சி மனிதனுடைய செயல்திறனை குறைய செய்கிறது.

காலத்தின் வேகத்தோடு பயணித்த இந்த செயற்கை நுண்ணறிவானது தற்போது மனிதனை விட சக்தி வாய்ந்ததாகவும் பணியில் சிறந்ததாகவும் காணப்படுகிறது. மனிதனுடைய அறிவாற்றலை மிஞ்சுகிற இந்த செயற்கை நுண்ணறிவு மனிதனுடைய அன்றாட வாழ்விற்க்கே ஆபத்தாய் அமைந்துள்ளது. மனிதனின் அறிவை காட்டிலும் இந்த செயற்கை நுண்ணறிவானது மிகவும் விரைவாகவும் சிறந்த செயலாக்கம் உடையதாகவும் இருக்கிறது. இதுல சுவாரஸ்யம் என்னனா, நாம கூட சில நேரங்களில் மனித யோசனைகளையும் ஆக்கப்பூர்வமான திறனையும் கருதாமல் செயற்கையை சார்ந்தே இருக்கிறோம். செயற்கை நுண்ணறிவிற்கேற்ப தழுவிக்கொள்வது இன்றைய மனுக்குலத்தின் நிலையாக இருக்கிறது. 10 பேர் செய்யுற வேலையை 1 செயற்கை நுண்ணறிவு பொருந்திய கணினியால் செய்யும் முடியும் என்பதை கண்டறிந்த பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிலாளிகளை பணிநீக்கம் (Layoff) செய்வதை தொடர்ச்சியாக நாம் சமீப காலங்களில் கேட்டு வருகிறோம். மனித படைப்பாற்றலை சார்ந்த நிறுவனங்கள் தற்போது செயற்கையை போற்றி அதையே சார்ந்திருக்கிறார்கள். இது இப்படியே போச்சுனா நாளைய தலைமுறையினருக்கு எந்த அளவிற்கு வேலைவாய்ப்புகள் அமையும் என்பது கேள்விக்குறியாகி உள்ளது. அநேக தொழிலதிபர்களும், உரிமையாளர்களும் வருவாயை அதிகமாக ஈட்டவே செயற்கை நுண்ணறிவு சாம்ராஜ்ஜியத்தை நிலைநாட்ட எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இயற்கையை விட செயற்கை ரொம்பவே எல்லாரையும் கவரக்கூடியதா இருந்தாலும் அது மனிதனின் சிந்தனைக்கு ஒரு replacement ஆகத்தான் உள்ளது. என்னதான் வேறலெவெல்ல வேல செஞ்சாலும் 'மனுஷன் மனுஷன்தான் கணினி கணினிதான்'. இத யாராலும் மாற்ற முடியாது. **இது மனிதர்க்கு மாற்றானது அல்ல. மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தவே பயன்படுகிறது.** மனுஷனுக்கு வேலைய easy ஆக மாற்றதான வந்திருக்கு இதுல என்ன தீங்கு இருக்குனு நீங்க யோசிக்கலாம். செயற்கையான விஷயம் ஆரம்பத்துல நல்லதாக காணப்பட்டாலும் போக போக அதனுடைய தன்மையை நாம அறிந்துக்கொள்ளலாம். இந்த உலகம் மனிதனை கவர்ந்திழுக்க என்னெல்லாமோ செய்யும். உலகத்தின் மக்களும் செயற்கையான கவர்ச்சியில் இழுக்கப்பட்டு அதின் வலைக்குள் விழுகிறார்கள். அநேக விஞ்ஞானிகள் சொல்வது, ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் செயற்கை நுண்ணறிவை யாராலும் கட்டுப்படுத்தவே முடியாது என்கின்றனர். வரும் காலங்களில் எல்லாம் **AI** யை சார்ந்தே வாழ முடியும் என்றால் ஆச்சர்யப்படுவதற்கு எதுவும் இல்லை.

Smart & Instantஆக எது நம்ம கண்ணுக்கு படுதோ அது தான் நமக்கு best ஆக தோணுது. வேதகாமத்துலயும் செயற்கையாக நிறைய விஷயம் இருந்துச்சு அவையெல்லாம் என்னவென்று நாம் பார்ப்போம்.

## 1. அவசரம் செயற்கைக்கு வழிவகுக்கும்

யாத்திராகமம் 32: 1-4 மலையிலிருந்து மோசே இறங்கிவர தாமதித்ததை ஜனங்கள் கண்டு எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டு பண்ணும் என்று ஆரோனை வற்புறுத்தினார்கள். மோசே ஆண்டவரோட தனித்து இருக்காரு, அதற்காக அவர் வரவே மாட்டாருனு இவங்க நெனச்சி பொன் கன்றுக்குட்டிய செஞ்சி வெச்சிட்டாங்க. மனிதனுடைய கையினால் செய்யப்பட்ட விக்கிரகத்தை தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டார்கள். இது போல தான் இந்த உலகத்திலும் ஒரு விஷயம் தாமதிக்கிதுன்னா ஜனங்கள் செயற்கையை நோக்கி பயணிக்கிறாங்க. மனிதர்களுக்கு பொறுக்க மனதில்லாமல் தங்களோட தேவை நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தோட இருக்கிறார்கள். இன்று சர்வதேச தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஒரு மனிதன் 8 மணி நேரம் செய்யும் வேலையை சில நிமிடங்களிலேயே **AI** செய்து முடிப்பதால் அந்நிறுவனங்கள் அவர்களை வீணாக எண்ணுகிறது. கடவுள் மனிதனுக்கு ஈவாக கொடுத்த திறமையை மட்டுப்படுத்தும் விதமாய் நடக்கிறது. நம்ம வாழ்க்கையிலும் late ஆகுதுனு சொல்லிட்டு செயற்கைக்கு நேராக போக வேண்டாம். இயற்கையான நேரத்திற்காகவே காத்திருப்போம். **ஆண்டவர் எப்போதுமே எந்த காரியத்தையும் காலத்திற்காக செய்யமாட்டார்.** நம்ம பார்வைக்கு தாமதமாக இருக்கலாம். ஆனால் தேவனை பொறுத்த வரை தன்னுடைய நேரத்தில் தான் செய்வார். நீங்க எதிர்ப்பார்த்த நேரத்துல நடக்கலனு செயற்கையா நீங்களே வேற வழிய choose பண்ண வேண்டாம். செயற்கை என்பது மனிதனால் உருவானது ஆண்டவர் படைத்ததெல்லாம் இயற்கையானதாய் இருக்கிறது. தேவனே நம்மை இயற்கையாக சிருஷ்டித்திருக்கிறார். செயற்கை என்பது ஆண்டவரிடத்தில் இல்லை. அவரால் இயற்கையிலும் இயற்கைப்பாற்பட்ட விதத்திலும் கிரியை செய்ய முடியும்.

## 2. தத்ரூபமான இயற்கை

சமூக வலைத்தளங்களில் **AI**யின் தாக்கம் மிகவும் மோசமாக இருக்கு. இந்த **AI** என்னதான் நல்ல காரியத்திற்கு பயன் பட்டாலும் பாலியல் மோசடி செய்பவர்கள் பெண்களின் புகைப்படங்களை தத்ரூபமாக மார்பிங் (Morph) செய்து அவர்களை அச்சுறுத்தி பணம் பறிக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்கள் முன்பு செய்யப் பட்டாலும் தற்போது **AI** யின் உதவியால் இன்னும் தத்ரூபமாக பெண்கள் சமுதாயத்தில் இழிவுப்படுத்த படுகின்றனர் Deepfake டெக்னாலஜி மூலம் ஒரு தனி நபரை குறித்து தவறான தகவல்களும் பரப்பப்படுகின்றன. இல்லாத ஒன்றை இருந்ததாகவும், நடக்காதவற்றை நடந்தவைகளாகவும் தத்ரூபமாக குறிப்பிட்ட நபரை காட்சிப்படுத்துகிறது. சில நேரங்களில் இந்த **AI** நம்மை வியப்பூட்டலாம். அதே சமயம் ஆச்சர்யப்படுத்தி அதிர்ச்சிக்குள்ளாகவும் செய்கிறது. மத்தேயு 7:15 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். ஆட்டுத்தோல் தத்ரூபமாக காணப் பட்டாலும் அதற்குள் இருப்பது ஓநாய். அநேக வாலிபர்கள் இன்று ஏமாறுவது ஆட்டுத்தோல் போத்திய செயற்கையைதான். எப்போதுமே பிசாசு தன்னுடைய சுய ரூபத்தில் வரமல் நம்மை வஞ்சிக்கிற தத்ரூபத்திலே தான் வருகிறான்.

இந்த உலகத்தில் கள்ளத்தனம் பெருகி காணப்படுகிறது. அனைத்தும் நிஜம் போல தோற்றமளித்தாலும் அதற்குள் கள்ளத்தனம் ஒளிந்திருக்கிறது. சமூக வலைத்தளங்களான Facebook, Instagramல் போலி ஐடியில் ஆட்டுத்தோல் போத்திய ஓநாய்கள் தேவபிள்ளைகளை குறிவைத்து பரிசுத்தத்தில் இடறிவிழ முயற்சிக்கிறார்கள். அநேகர் தங்கள் ஸ்மார்ட்போனில் விளையாடும் ஆன்லைன் கேம்ஸ் மூலம் **AI** computer voiceக்கு கீழ்ப்பட்டு அதின் படியே செய்கிறார்கள். வாலிபர்களே செயற்கையான தத்ரூபத்தைக் கண்டு ஏமாறாதீர்கள் ஆதி 3:5ல் ஏவாளை வஞ்சித்தவன் இன்று யார் அவனுக்கு நேரத்தை அளிக்கிறார்களோ அவர்களை வஞ்சிக்கிறான். எனவே, நண்பர்களே உங்கள் நேரத்தை உறிஞ்சும் android apps மற்றும் games களிலிருந்து விலகி இருங்கள். அநேக வாலிபர்கள் இரவிலே smartphoneல் artificial intelligence மூலம் இழுக்கப்பட்டு தங்கள் தாலந்துகளை உலகத்தின் அதிபதியிடம் ஒப்படைக்கிறார்கள்.

மென்பொருள் பொறியாளர்கள் தங்கள் விலையேறப்பெற்ற ஞானத்தை தவறான விதத்திலே செலவழிக்கிறார்கள். Artificial intelligence என்ற நவீன ஆயுதத்தை பிசாசு ரொம்ப intelligent ஆக பயன்படுத்துறான். ஆரம்பத்தில அறிவுசார்ந்ததாக காணப் பட்டாலும் அது பிசாசோட கட்டுப்பாட்டிற்குள்ள இருக்கு என்ற உண்மையை ஒருபோதும் மறக்காதீங்க. நாளை இது உலகையே ஆட்டிப்படைக்கப்போகும் தந்திரமான வஞ்சனை என்று நாம் அறிந்துக்கொள்வோம்.

பிரசங்கி 1:2 மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். என்ற வசனத்தின்படி மாயையான உலகத்தில் செயற்கையானத த்ரூபத்திற்கு நமது கண்களையும் சிந்தனைகளையும் விட்டுக்கொடுக்க வேண்டாம். ஏசாயா 62:6 எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல்முழுதும், இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரனைக் கட்டளையிடுகிறேன். என்ற வசனத்தின்படி இதை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பான நண்பர்களே, செயற்கையில் சிக்கியிருக்கிற வாலிபர்களை மீட்கவே நீங்களும் நானும் ஜாமக்காரனாய்ப்போல இந்த கடைசி நாட்களில் செயல்ப்படக்கடவோம். அதை தான் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அவர்களை மீட்பதற்கு முதலில் நீங்களும் நானும் விழாம நிலைத்திருக்கக்கடவோம். இந்த உலகில் நம்மை கவர்ந்திழுக்கிற அனைத்தும் original இல்ல சிலுவை மட்டும் தான் original. ஒரு software வந்தா அதற்கு இணையான மற்றொரு softwareஅ உருவாக்குவாங்க. அது மாறிக்கொண்டே இருக்கும் நம்மை வஞ்சித்துக் கொண்டே இருக்கும் ஏன்னா அதை இயக்கிக் கொண்டிருக்கிறது சத்துருவே. ஆனால் சிலுவை ஒன்னே ஒன்னு தான்.. அது மாறாது, அதில் ஏறி மரணத்தை வென்றவரும் மாறுவதில்லை, ஆகவே, இயற்கையின் நகலை பகுத்தறிந்து சிலுவையின் நிழலிலே எப்பொழுதும் தங்கியிருக்க கடவோம்!!



# பெங்களூரு அடோனாய் திருச்சபையில் விசேஷித்த துதி ஆராதனை

துதி ஆராதனை என்பது சத்துருவை வீழ்த்தும் வல்லமையான ஆயுதம். ஆம்! துதி ஆராதனை எனும் ஆயுதத்தின் மூலமாக அந்தகார வல்லமைகளை முறியடித்து, ஆவியின் மண்டலத்தில் நாம் ஜெயத்தை எடுக்க முடியும். கடந்த ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி பெங்களூரு ராமமூர்த்தி நகரில் உள்ள அடோனாய் திருச்சபையில் விசேஷித்த துதி ஆராதனை கூட்டங்கள் நடைபெற்றது. அந்த திருச்சபையின் தலைமைப் போதகர் **Rev. Victor D'Monte** அவர்களின் அழைப்பினை ஏற்று நமது சகோதரர் போ. ஆல்வின் தாமஸ் அவர்கள் மகிமையான துதி ஆராதனை ஏறெடுத்து, தேவ பிரசன்னத்தில் ஜனங்களை நடத்தினார்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் தேவாதி தேவனை உயர்த்தும் பாடல்களைப்பாடும்போது, வந்திருந்த ஜனங்களைக் கர்த்தர் விடுதலையாக்கினார். ஒரு மகிமையின் மேகம் அந்த திருச்சபையையும் தேவ பிள்ளைகளையும் மூடினது. தேவன் தம்முடைய தாசனோடு இடைப்பட்டு ஜனங்களுக்குத் தேவையான தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பேசினார். தேவ ஆவியானவரின் அபிஷேகத்தை ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டனர். தேவன் தமது ஜனங்களை ஆசீர்வதித்தார்.



REV. ALWIN THOMAS | SR. PASTOR VICTOR D'MONTE | PASTOR JOHN TRISTRAM

### தோள்பட்டை வலி சுகமானது

நான் கடந்த 10 வருடங்களாக தோள்பட்டை வலியினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். என்னால் பொருட்களைத் தூக்க முடியாது. தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு வேதனையை அனுபவித்து வந்தேன். வலியோடுதான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஆராதனை வேளையில் போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். அந்த நொடிப்பொழுதில் கர்த்தருடைய கரம் என்னை தொட்டதை உணர்ந்தேன். அதுமட்டுமல்லாமல், மிகுந்த வலியிலிருந்து என்னை கர்த்தர் விடுதலையாக்கினார். இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக!







## புது நம்பிக்கை பிறந்தது

நான் இந்த துதி ஆராதனை கூட்டத்திற்கு மிகுந்த எதிர்பார்ப்போடு வந்தேன். என்னுடைய கவலையை மறந்து, தேவனை ஆராதித்தேன். என் பிரச்சனைகளைக்காட்டிலும் பெரிய தேவன் என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்குள் பிறந்தது. தேவன் என்னோடு இடைப்பட்டதை உணர்ந்தேன்.







## 15 வருடமாக இருந்த முதுகுதண்டு வலி சுகமானது

என் பெயர் சுனில். நான் இந்த கூட்டத்திற்கு போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு வந்தேன். 15 வருடங்களுக்கு முன்பு எனக்கு விபத்து ஏற்பட்டத்தினிமித்தம் என்னுடைய முதுகு தண்டு பாதிக்கப்பட்டது. அதற்காக பெல்ட் அணிந்து வருகிறேன். ஆனால் ஆராதனையில் போதகர் தீர்க்கதரிசனமாக, "பல வருடங்கள் முதுகு தண்டு வலியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு நபருக்கு தேவன் சுகத்தைத்தருகிறார்" என்று சொன்னபோது, நான் மேடைக்கு முன்பாக வந்தேன். இனி பெல்ட் உங்களுக்குத் தேவையில்லை, உன் எலும்புகளை கர்த்தர் நிணமுள்ளதாக்குகிறார் என்று போதகர் எனக்காக ஜெபித்தார்கள். அந்நேரத்தில் கர்த்தர் எனக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார்.











## கட்டிகள் மறைந்தது

என் பெயர் அமுதா. என் வயிற்றில் சிறு சிறு கட்டிகள் இருந்தது. என்னுடைய வயிறு கல்லுமாதிரியாக தான் இருக்கும். போதகர் என் தலையில் கைகளை வைத்து ஜெபித்தார். பிறகு கூட்ட முடிவில் யாருக் கெல்லாம் எங்கெல்லாம் பிரச்சனைகள் இருந்ததோ அங்கு கைகளை வைத்து பரிசோதித்துப்பாருங்கள் என்றார். உடனே நான் என் வயிற்றின் மேல் கை வைத்து சரிபார்த்தபோது, கட்டியே இல்லை. என்னுடைய வயிறு **soft**ஆ இருக்கிறது. கர்த்தருக்கே நன்றி.







## Ps. Anne D'Monte (Wife of Senior Rev. Victor D'Monte)

**போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் எங்களுடைய அடோனாய் திருச்சபைக்கு வந்து ஊழியம் செய்தது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவர் ஆராதனை எடுக்கும்போது தேவனுடைய மகிமையான பிரசன்னத்தை நாங்கள் உணர்ந்தோம். ஜனங்கள் முழங்கால்படியிட்டு தேவாதி தேவனை ஆராதித்தார்கள். வந்திருந்த ஒவ்வொரு ஜனங்களையும் தேவன் தொட்டார். அநேகர் அற்புத சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொண்டவர்களாய் திரும்பி சென்றனர். கர்த்தர் கொடுத்த இந்த நல்ல தருணத்திற்காய் நானும் எங்கள் திருச்சபையாரும் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம்.**



# நீங்களும் சுவிசேஷ ஊழியத்தில் பங்காற்றலாம்!

## சுவிசேஷம் அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமையாருக்கிறது (1 கொரிந்தியர் 9:16)



இந்தக் கடைசி நாட்களில், தேவன் நமது ரூஹா தொலைக் காட்சி ஊழியங்கள், சமூகவலைதள ஊழியங்கள் மூலமாக உலக மெங்கும் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவித்திட கிருபை செய்து வருகிறார். இலட்சக்கணக்கான ஜனங்கள் தேவனுடைய விடுதலை யையும் அற்புதங்களையும் பெற்று வருகின்றனர். கர்த்தருடைய வார்த்தையானது சோர்ந்து போயிருக்கும் ஜனங்களைப் பெலப் படுத்தி வருகிறது.

கிறிஸ்துவை அறியாத மற்ற மத நம்பிக்கை உடைய ஏராளமான மக்களும் சுவிசேஷத்தை அறிந்து வருகின்றனர். ஒவ்வொருவரின் வீட்டிலும் கர்த்தருடைய வார்த்தை தொனிக்கப்படுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் பயன்படக்கூடிய சிறப்பான நிகழ்ச்சிகளை ரூஹா தொலைக்காட்சி தொகுத்து வழங்குகிறது.

நமது ரூஹா தொலைக்காட்சியானது ஆகிய SCV, TCCL கேபிள் நெட்வொர்க் வழியாக ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக VK Digital நெட்வொர்க்கில் பணம் செலுத்த முடியாத காரணத்தால் ஒளிபரப்பு செய்ய முடிய வில்லை. அநேக ஜனங்கள் போன் மூலமாக VK Digital நெட்வொர்க்கில் ரூஹா டிவி வரவில்லை, மறுபடியுமாக ஒளிபரப்பு செய்யுங்கள் என்று கூறுகின்றனர். மேலும் தொலைக்காட்சி நடத்து வதற்குத் தேவையான உபகரணங்கள், கேமராக்கள், கணிணிகள் வாங்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கி வரும் இந்த தொலைக்காட்சி ஊழியத்திற்காக ஜெபிக்கவும், எங்களோடு இணைந்து ஊழியத்தை நிறைவேற்றவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். ஒவ்வொரு மாதமும் பல இலட்சங்களைச் செலவு செய்து இந்த சுவிசேஷ ஊழியத்தை செய்து வருகிறோம். ரூஹா தொலைக்காட்சி ஊழியத்தில் பங்காளராகி, சுவிசேஷ ஊழியத்தைத் தாங்குங்கள்.

மாதந்தோறும் 500/- 1000/- 2000/- அல்லது நீங்கள் விரும்புகிறபடி கொடுத்து தாங்கலாம். ரூபாய் 10,000 கொடுத்து ஒரு நிகழ்ச்சியைப் பொறுப்பெடுக்கலாம். மேலும் விபரங்களுக்கு 9884901777 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**சுவிசேஷத்தை அறிவிப்போம்! இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்!!**




## உங்கள் கவனத்திற்கு!

### அன்பான ரூஹா சுவாசக்காற்று பத்திரிக்கை வாசகர்களே...

- இந்த மாதப்பத்திரிக்கையைக் குறித்த மேலான உங்களுடைய கருத்துகளை நாங்கள் வரவேற்கிறோம்.
- பத்திரிக்கையை வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.
- பத்திரிக்கைக்கான வருட சந்தாவை புதுப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா ரூபாய் 200/-
- உங்கள் தொழில், வியாபாரங்களைக் குறித்த தகவல்களை மிகக்குறைந்த கட்டணத்தில் ரூஹா டிவியில் விளம்பரப்படுத்த கீழ்காணும் தொலைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்.
- போதகர்கள், சுவிசேஷகர்கள் உங்களின் தேவ செய்திகளை ரூஹா டிவியில் ஒளிபரப்பு செய்ய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி எண் 9884901777 | 9884331777**

# இதற்காய் ஜெபிக்கிறீர்களா?

**நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன்... எசேக்கியேல் 22:30**

- இந்தியாவில் 18 சதவீதமான பெண் குழந்தைகள் 15க்கும் குறைவான வயதிலும், 47 சதவீதமான பெண் குழந்தைகள் 18க்கும் குறைவான வயதிலும் திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றனர். 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தமிழகத்தில் 62,500 பேர் 15 வயதுக்குள்ளாக மணமுடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.
- 2021 கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் ஒருநாளைக்கு பெண் குழந்தைகளின் பாலியல் வன்கொடுமை 86 வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. ராஜஸ்தான் மாநிலத்தில்தான் அதிகமான பெண்குழந்தைகள் பாலியல் ரீதியான துன்புறுத்தப்படுகின்றனர். பெரும்பாலும் பெண்குழந்தைகள் தங்களுக்கு மிகவும் நெருக்கமான தெரிந்த உறவுகளாலே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர்.
- உலகளவில் பெண் குழந்தைகளைக் கடத்துவதில் இந்தியா 7வது இடத்தில் உள்ளது. கடந்த வருடத்தில் மட்டும் 7,200 பெண்குழந்தைகள் விபச்சாரத் தொழிலுக்காக கடத்தப்பட்டிருக்கின்றனர்.
- 42% இந்திய பெண்கள் 19 வயதிற்கு முன்பே பாலியல் வன்கொடுமைக்குள்ளாகிறார்கள்.
- பெண்குழந்தைகளுக்கு எதிராக செயல்படும் சாத்தானின் வல்லமைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**அக்டோபர் 11 உலக பெண் குழந்தைகள் தினம்**

- FSSAI (Food Safety and Standards Authority of India) அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள மொத்த உணவுகளில் மூன்றில் ஒரு பங்கு சாப்பிடுவதற்கு முன்பே வீணடிக்கப்படுகிறது அல்லது கெட்டுபோகிறது.
- UNEP உணவு கழிவு அட்டவணை அறிக்கை 2021ன்படி, இந்தியாவில் வீட்டு உணவு கழிவுகள் ஆண்டுக்கு ஒரு நபருக்கு 50 கிலோ என மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலக மக்கள் தொகையில் 42 சதவீதம் பேர் ஆரோக்கியமான உணவை வாங்கமுடியாது என்று ஆய்வறிக்கை கூறுகிறது.
- இந்தியாவில் தினமும் சுமார் 7000 பேர் பட்டினியினால் இறக்கின்றனர். அதாவது வருடத்திற்கு 25 இலட்சம் பேர்.
- இந்தியாவில் சுமார் 20 கோடி பேர் இரவு உணவு சாப்பிடாமல் தூங்குகின்றனர்.
- இந்தியாவில் ஆரோக்கியமற்ற உணவுகளால் ஏற்படும் நோய்களால் ஆண்டுதோறும் 1.7 மில்லியனுக்கும் அதிகமானோர் இறக்கின்றனர். ஜனங்களுக்கு ஆரோக்கியமான உணவும், தேசத்தில் உணவுத்தட்டுபாடு இல்லாமல் அனைவருக்கும் உணவு கிடைக்கவும் ஜெபிப்போம்.

**அக்டோபர் 16 உலக உணவு தினம்**

- இந்தியாவில் சுமார் 56மில்லியன் பேர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்
- ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 இலட்சம் பேர் மன அழுத்தத்தினால் தற்கொலை செய்கின்றனர்.
- சர்வதேச நிறுவனத்தின் ஆய்வறிக்கையின்படி, இந்தியாவில் 1 இலட்சம் பேருக்கு 3 மனநல மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர்.
- இந்தியாவில் 15 வயது முதல் 24 வயது வரையுள்ள ஏழு பேர்களில் ஒருவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு எந்த ஒரு காரியத்தையும் செய்ய ஆர்வமற்றவராகவும் இருக்கிறார்கள்.
- கொடுமைப்படுத்தபடுதல் மற்றும் பழிவாங்கப்படுதலே 3.8% ஆண்கள் மற்றும் 3% பெண்கள் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட முக்கிய காரணங்களாக இருக்கிறது.
- மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவன் பூரண விடுதலையையும் சுகத்தையும் தரும்படி ஜெபிப்போம்.

**அக்டோபர் 10 உலக மன ஆரோக்கிய தினம்**


Scan here to Donate

**1 Account Details** வங்கிக்கணக்கு

| | | |
|---|---|---|
| ACC. NAME | RUAH MINISTRIES | RUAH MINISTRIES BUILDING FUND |
| ACC. NUMBER | 05741450000037 | 50200033712782 |
| BANK NAME | HDFC Bank | HDFC BANK |
| BRANCH NAME | Kodambakam | Kodambakkam |
| IFSC CODE | HDFC0000574 | HDFC0000574 |

**சுவிசேஷம் அறிவிக்கப்பட விதையுங்கள்!**

**2** Google Pay / Phone Pe
**9444150777**

**3 Cheque Favour Name:**
· Ruah Ministies
· Ruah Ministries Building Fund

**4 E.M.O** மணி ஆர்டர்
To Address: Ps. Alwin Thomas
82, Jawaharlal Nehru Salai,
Vadapalani, Chennai - 26, 9884710777

நீங்கள் காணிக்கை அனுப்பிய பிறகு, உங்களது பெயர், முகவரி மற்றும் எந்த ஊழியத்திற்காக நீங்கள் காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரங்களை **9884901777** என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.



Owned and Published by E.Alwin Thomas No.5, 18th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Printed by T. Simon Peter Vasanth Prints & Packs, No.44, Paarthasaarathi pettai Street, Vellala Teynampet, Chennai - 600 086. Editor E. Alwin Thomas

Registered Newspaper RNI No. TNTAM/2010/36309 | Postel Regd.No. TN/CC(S)DN/411/23-25
Licensed to Post WPP No.TN/PMG(CCR)WPP-585 / 2023-2025 Published on 1st week of Every Month
Posted between 25-30 September 23 | Posted at RMS Egmore Patrica Channel







*If Undelivered please Return to:*

**RUAH SUVASA KATRU**

No. 82, 100 Feet Road,
Vadapalani, Chennai,
Tamil Nadu 600026